#StaySafeGoDigital

# மோசடியை எப்படி கண்டுபிடிப்பது?



## மோசடியின் அறிகுறிகள்

### 01. உடனடியாகப் பணம் அனுப்பவேண்டும்

- பணத்தை உடனடியாக அனுப்பாவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என அழைப்பவர் மிரட்டுவார்.

### 02. தனிப்பட்ட விவரங்கள் கேட்கப்படும்

- அழைப்பவர் தான் ஓர் அரசாங்க அதிகாரி அல்லது சட்டபூர்வ வர்த்தகத்தின் பிரதிநிதி என அடையாளம் காட்டிக் கொள்வார். நீங்கள் குற்றம் ஏதும் செய்யவில்லை என நிரூபிப்பதற்கான விசாரணைக்கு உங்களது வங்கி விவரங்கள், அடையாள அட்டை எண் போன்ற தனிப்பட்ட விவரங்கள் தேவைப்படுவதாகக் கேட்பார்.

### 03. மற்றவர்களிடம் சொல்லக்கூடாது

- இந்த விஷயத்தை இரகசியமாக வைத்திருக்கும்படி நீங்கள் எச்சரிக்கப்படுவீர்கள்.

### 04. “+” குறியீடு முன்னிணைப்பு

- உள்ளூர் தொலைபேசி எண் போன்றதோர் எண்ணில் “+” குறியீடு முன்னிணைப்பாக இருந்தால், அது பெரும்பாலும் போலி எண்ணிலிருந்து வரும் அழைப்பாக இருக்கும். உள்வரும் அனைத்துல அழைப்புகளுக்கு மட்டுமே “+” குறியீடு முன்னிணைப்பாகக் காட்டப்படும். உள்ளூர் அழைப்புகளுக்கு “+” முன்னிணைப்பு இருக்காது.




## பொதுவான மோசடிகள்

### மின்-வணிக மோசடி




மோசடிக்காரர்கள் குறைவான விலைகளில் பொருட்களை விற்பனைக்கு வழங்கி, பணத்தை முன்கூட்டியே தருமாறு உங்களிடம் கேட்பார்கள்.

### சமூக ஊடகத்தில் ஆள்மாறாட்ட மோசடி



மோசடிக்காரர்கள் உங்களது தனிப்பட்ட விவரங்களைப் பெறுவதற்காக, ஊடுருவப்பட்ட / போலி சமூக ஊடகக் கணக்குகளைப் பயன்படுத்தி உங்களது குடும்ப உறுப்பினர்களாக அல்லது நண்பர்களாகப் பாசாங்கு செய்வார்கள்.

### கடன் மோசடி




மோசடிக்காரர்கள் உரிமம்பெற்ற வட்டிக்கடையின் ஊழியராகப் பாசாங்கு செய்து, கடன் சேவைகள் வழக்குவதாகக் குறுந்தகவல் அல்லது வாட்ஸ்ஆப் தகவல் அனுப்புவார்கள்.

## நீங்கள் செய்ய வேண்டியவை:




**01.** உங்களுக்கு உறுதியாக இல்லாவிட்டால், NCPC மோசடித் தடுப்பு நேரடித் தொலைபேசி சேவையை **1800-722-6688** என்ற எண்ணில் அழைக்கவும் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை) அல்லது hotline@ncpc.org.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

**02.** தனிப்பட்ட விவரங்களையும் ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொற்களையும் (OTPs) ஒருபோதும் தொலைபேசிவழி வெளியிடவேண்டாம். **எப்போதும் அமைப்பின் மத்திய நேரடித் தொலைபேசி சேவையை அழைத்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.** சந்தேகத்திற்குரிய அழைப்பில் தரப்படும் தொடர்பு எண் மூலமாக அல்ல.

**03.** “+” முன்னிணைப்பைக் காட்டும் எதிர்பார்க்காத அழைப்புகள், உள்வரும் அனைத்துலக அழைப்பாக இருக்கும். இத்தகைய அழைப்புகளுக்குப் பதிலளிக்கும்போது **கூடுதல் கவனமாக இருக்கவும்.**

சிங்கப்பூர் காவல்துறை, சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டது

SDO நேரடித் தொலைபேசி எண்: 6377 3800

SG :DIGITAL OFFICE